# பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 176** **நாள்: 07.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் தீபாவளி திருநாள் ஒட்டி 64.55 டன் பட்டாசுக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலும் தீபாவளி திருநாள் பண்டிகை முன்னிட்டு 05.11.2018 முதல் 07.11.2018 மாலை வரை 64.55 டன் பட்டாசு கழிவுகள் (Cracker Waste) சேகரிக்கப்பட்டு, இதில் 9.04 டன் பட்டாசு கழிவு குப்பைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுறுத்தலின்படி கும்மிடிபூண்டி அருகிலுள்ள சிப்காட் தொழிற்சாலை வளாகத்திலுள்ள, தொழிற்சாலை கழிவுகள் மேலாண்மை கூட்டமைப்பு நிறுவனத்ததில் அபாயகரமான கழிவுகள் (Hazardous Waste) ஒப்படைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் தொடர்ந்து (09.11.2018) நாளை வரை நடைபெறும்.

இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் என மொத்தம் 19,000 பணியாளர்கள் சுழற்சி முறையில் துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், டெங்கு மற்றும் மர்ம காய்ச்சல் தொடர் நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து காலிமனையிடங்கள், பொது இடங்கள் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகிய பகுதிகளில் தூய்மை பணி நடவடிக்கையாக கூடுதலாக 46 சிறுரக துப்புரவு வாகனங்கள் மூலம் குப்பைகள் அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**